வனத்துறைக்கு அந்தப் பகுதியிலே எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லை. அது ரெவின்யூ மற்றும் சென்னை மாநகரத்தைச் சார்ந்த பகுதி. அந்தப் பகுதி வனத்துறைக்குச் சம்பந்தப்பட்ட பகுதி அல்ல. வனத்துறைக்குக் கட்டுப்பட்ட பகுதியும் அல்ல. எனவேதான் அங்கே அம்பேத்காருடைய மணிமண்டபம் எழுப்பப்படுகிறது. எனவே, வனத்தைப் பொறுத்தவரையில் வனத்துறை சம்பந்தப்பட்ட பகுதியாக இருந்தால் அதற்குரிய அனுமதியை மைய அரசிடமிருந்தும் மைய அரசு சம்பந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்தும் கோரவேண்டும். அதையும் செய்து, மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வைப் போற்றி, அதற்குரிய தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மெத்தப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

163--

குடும்ப அட்டைகள் மூலம் வழங்கப்படும் உணவுப் பொருள்களுக்கு மத்திய அரசின் நிதி உதவி

*19159–**திரு. கே. கந்தசாமி:**

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) குடும்ப அட்டைகள் மூலம் வழங்கப்படும் உணவுப் பொருள்களுக்கு மத்திய அரசால் நிதியுதவி அளிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், நிதியுதவியை அதிகப்படுத்தி வழங்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன், உணவு அமைச்சர்:

(அ) குடும்ப அட்டைகள் மூலம் ரூபாய் இரண்டரை மற்றும் மூன்றரை ரூபாய்க்கு வழங்கப்படும் அரிசிக்கு மாநில அரசுக்கு ஏற்படும் இழப்புக்கு மத்திய அரசு நிதியுதவி எதுவும் வழங்குவது இல்லை.

(ஆ) வினா எழாது.

164--

சென்னை நகரில் குடிநீர்க் குழாய்களில், கழிவுநீர் கலப்பதைத் தடுக்கும் திட்டம்.

*15050–**திரு. கே. ஏ. மனோகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சென்னை நகரில் பல இடங்களில் கழிவுநீர் குடிநீர்க் குழாய்களில் கலந்து விடுவதால் காலரா, மஞ்சள்காமாலை போன்ற நோய்கள் பரவுவதை அரசு அறியுமா?